## 18

# "இயேசுவைப் பற்றிய இன்னொரு கண்ணோட்டம்"

## (யோவான் 16)

*"அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" (வசனங்கள் 29-32).*

இயேசு சிலுவையில் அறையப்படுதல் நெருங்கி வருகையில், அவர் தமது அப்போஸ்தலர்களிடம், தாம் இனியும் உருவக மொழியில் அவர்களிடம் பேசப்போவதில்லை என்று கூறினார். அதாவது அவர்கள் புரிந்துகொள்ளப் போதிய அளவு பக்குவமாக இராததால் அவர்களிடம் மறைக்கும் வகையில் உவமைகளில் அவர் இனி பேசமாட்டார். முடிவு இப்போது பார்வையில் இருந்தது, மற்றும் முன்னதாக இருந்த துன்பம், என்ன நடைபெற இருந்தது என்பதைத் தெளிவாக மற்றும் தைரியமாக விரித்துரைத்தல் தேவைப்பட்டது என்பதால் அவர்களிடம் தெளிவாகப் பேசுவது என்று அவர் முடிவு செய்தார். இயேசுவின் மரணத்தினுடைய மூழ்கச்செய்யும் விளைவுகளுக்கு அவர்களைத் தக்க வகையில் ஆயத்தம் செய்யத் தெளிவான பேச்சு தேவையாக இருந்தது.

இந்த வேளையில் இயேசு தமது தெளிவான பேச்சை நோக்கிக் கவனத்தை ஈர்த்தார் என்ற உண்மை, அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில் இனி ஒருக்காலும் முன்புபோன்று பேசுவதில்லை என்று திட்டமிட்டதாக அர்த்தப்படுத்துவதில்லை. வர இருந்த நாட்களில் அவர் இன்னும் அதிக தெளிவாகப் பேசுவார். அவரது வாக்குத்தத்தம் அவரது தற்போதைய கலந்துரையாடலை மாத்திரம் அல்ல, ஆனால் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்த இருந்த வார்த்தைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். ஆவியானவர் தமது நினைவூட்டுதல்கள் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றுடன் வரும்போது, என்ன நடந்திருந்தது என்றும் மற்றும் பிதாவின் சித்தத்திற்கு இணங்க அடுத்து என்ன நடக்க வேண்டும் என்பவை பற்றிய சத்தியத்தை அவர்கள் *அறியச்* செய்வார்.

இயேசுவின் பேச்சில் இருந்த இந்தத் தெளிவான தன்மையை அவரது உரையாடலில் உணர்ந்து அறிந்த (அப்போஸ்தலர்கள்,) "அவருடைய

சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம்'' என்று கூறினர் (16:29). அவர்களிடம் இயேசு கூறியது உண்மையாக முழுமையாக இருந்தது என்பதை அவர்களால் காண முடிந்தது. அவர் அப்போது கூறியிருந்த எதைப்பற்றியும் விளக்கம் தரும்படி யாரும் அவரிடம் கேட்கவில்லை. இந்த நிறைவான தெளிவானது அப்போஸ்தலர்களுக்கு, அவரது தெய்வீகத்துவத்தின் நிரூபணமாக இருந்தது.

இயேசு செய்தவை மற்றும் அவர் பிதாவினிடத்தில் இருந்து வந்திருந்தார் என்ற அவர்களது ஒப்புக்கொள்ளுதலுக்கு, "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா'' என்று கேட்டதன் மூலம் இயேசு பதில் அளித்தார். அவர்கள் இன்னும் அதிகமானவற்றைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாக இருந்தது என்று அவர்கள் அறிய வேண்டும் என அவர் விரும்பினார். அவர்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்தவற்றைத் தாங்குமளவுக்கு அவர்களின் விசுவாசம் போதிய பலமுடையதாக இருக்க வில்லை என்பதை அவர்கள் காண வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்களின் விசுவாசமும் புரிந்துகொள்ளுதலும் எல்லைக்கு உட்பட்டதாக இருந்தது, மற்றும் அவர்கள் கடுமையாகச் சோதிக்கப்படுவார்கள்.

இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் நிகழ்த்திய இந்தக் கடைசி உரையாடல், நாம் பேணி மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டிய, கர்த்தரைப் பற்றிய இன்னொரு சித்தரிப்பை நமக்குக் கொடுக்கிறது. இந்தச் சித்தரிப்பில் நாம் காண்பது என்ன?

## அவர் தெளிவாகப் பேசுகிறார்

*நமது தெய்வீக மீட்பர் என்ற வகையில் இயேசு நம்மிடம் தெளிவாகப் பேசுவதை நாம் காணுகிறோம்.* இயேசு எப்போதும் போதிக்கும் கிறிஸ்துவாக இருக்கிறார். அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், ''இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; ... பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்'' என்று கூறினார் (16:25). அவர்கள் மீது விரைவில் விழ இருந்தவற்றைப் பற்றிய ஆழமான புரிந்துகொள்ளுதலுக்குள் அவர்களை அவர் மென்மையாக வழிநடத்தினார். முன்னதாக அவர், உருவக மொழியைப் பயன்படுத்தி அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியவற்றை மாத்திரம் அவர்களுக்குக் கொடுத்திருந்தார், ஆனால் இப்போது சூழ்நிலைகள் வற்புறுத்தியதால் அவர்களுக்கு அவர் அதிகமானவற்றைக் கூறினார்.

இயேசுவின் ஊழியம் பிரதானமாக, போதிக்கும் ஊழியமாகவே இருந்தது. அவர் நகரங்கள் தோறும் சென்று, இராஜ்யம் வர இருந்ததை அறிவித்தார். அவர் தமது அப்போஸ்தலர்களுடன் நெருக்கமாக ஊழியம் செய்வதில் மூன்று ஆண்டுகளைச் செலவிட்டிருந்தார். ஒரு "சீஷர்" என்பவர் "கற்றுக்கொள்பவராக" இருக்கிறார்; வேதவசனங்களில் இந்தச் சொற்றொடர் கிறிஸ்துவின் மாணவரைக் குறிக்கிறது. சீஷர் அன்றாடம் கற்று வளர வேண்டியவராக இருக்கிறார். இயேசுவின் சீஷர்கள் விரைவாகக் கற்றுக்கொள்ளவில்லை என்றாலும், கர்த்தர் அவர்களுக்குத் தொடர்ந்து போதித்தார். நமக்கும் அவர் அதையே செய்கிறார்.

சில வேளைகளில் நாம் மெதுவாகப் புரிந்துகொள்பவர்களாக இருக்கிறோம், ஆனால் இயேசு நமக்குத் தொடர்ந்து போதிக்கிறார். நமது இரட்சிப்பு (நமது) பூரணத் தன்மையைச் சார்ந்துள்ளதா? இல்லை, அது நாம் விசுவாசத்துடனும் உண்மையுடனும் இயேசுவைப் பின்பற்றுதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## அவர் பொறுமையுடன் காத்திருக்கிறார்

இரண்டாவதாக நாம், இயேசுவை, நமக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் நமது தெய்வீக மீட்பர் என்ற வகையில் காணுகிறோம். அவர் எப்போதும் காத்திருக்கும் கிறிஸ்துவாக இருக்கிறார். அப்போஸ்தலர்களிடத்தில் இயேசு, "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்" என்று கேட்டார் (16:31). அவரது மரணம் என்ற மாபெரும் சோதனை அவர்களை மூழ்கடிக்கும்போது, அவர்களின் விசுவாசம் விழுந்துபோகும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர், "இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது" என்று கூறினார் (16:32).

காண்பவர்கள் என்ற வகையில் நாம், இயேசு தமது அப்போஸ்தலர்களிடம் பொறுமை இழந்து போயிருப்பார் என்று எதிர்பார்த்து இருக்கலாம். அவர்கள் விசுவாசிக்கும்படி போதிப்பதற்கும் வழிநடத்துவதற்கும் அவர்களுடன் அவர் மூன்று ஆண்டுகளைச் செலவிட்டிருந்தாரே. வெளிப்படுத்துதலுக்கான தமது மாபெரும் வேளை - பூமியின்மீது அவருக்கு ஏற்பட்ட மாபெரும் சோதனை - வந்தபோது, தமது அதிகமான நேரத்தைத் தாம் யாருக்கு ஊற்றியிருந்தாரோ அந்த அப்போஸ்தலர்கள் சிதறி தங்கள் சொந்த வீடுகளுக்குப் பறந்து போய்விடுவார்கள் என்பதை அவர் அப்போதும் அறிந்திருந்தார்.

இங்கும் மற்ற வசனப்பகுதிகளிலும் சித்தரித்துள்ளதில் நாம் காணுகிறபடி, இயேசுவின் சத்தியத்தை நாம் அதிகம் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படிக்கும் உண்மையாகவே அவரில் விசுவாசம் கொள்ளும்படிக்கும் நமக்காகக் காத்திருக்கும் மீட்பராக இயேசு இருக்கிறார். அவரைப் பேதுரு மறுதலித்த பின்பு (கூட) அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டதுமின்றி, தமது எல்லா அப்போஸ்தலர்களையும் அவர் மன்னித்து அவர்களையும் ஏற்றுக்கொண்டார்; ஏனெனில் அவர்களும்கூட அவரைக் கைவிட்டிருந்தனர்.

அவர்களுக்கு அவர் எவற்றைச் செய்தாரோ அவற்றையே அவர் நமக்கும் செய்வார். மனந்திரும்ப நமக்கு மனமின்மை என்பது மாத்திரமே நமக்கும் இயேசுவுக்கும் இடையில் தடையைக் கொண்டுவரும் ஒரே விஷயமாக உள்ளது. நாம் யூதாஸை நினைவுகூர வேண்டும். அவர் மனந்திரும்பவில்லை, மனந்திரும்புதல் அற்ற ஒரு மனிதர் நம்பிக்கையற்ற மனிதராக இருக்கிறார். யூதாஸின் வாழ்வு, நம்பிக்கையற்ற முடிவைக் கொண்டுள்ள, சுயமாய்ப் படைக்கப்பட்ட வரலாறாக இருக்கையில், பேதுருவின் வாழ்வு முடிவற்ற நம்பிக்கையைக் கொண்டுள்ள, கிறிஸ்துவினால் படைக்கப்பட்ட வரலாறாக இருந்தது. மனந்திரும்பும் நபர் கிறிஸ்துவின் நித்திய வாழ்விற்குள் பிரவேசிக்க முடியும்.

## அவர் தவறாத நீடியபொறுமையுடன் இருக்கிறார்

மூன்றாவதாக நாம், இயேசுவை நமக்காக நீடிய பொறுமையுடன் இருக்கும் நமது தெய்வீக மீட்பர் என்ற வகையில் காணுகிறோம். இயேசு எப்போதும் உண்மையுள்ள கிறிஸ்துவாக இருக்கிறார். அவர் தம்மைத் தமது அப்போஸ்தலர்கள் கைவிட்டு தம்மைத் தனியே விட்டுவிடுவார்கள் என்பதை அறிந்திருந்தார், ஆனாலும் அவர்களிடம் அவர், "... ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" என்று கூறினார் (16:32). அவரது நெருங்கிய நண்பர்கள் பாதுகாப்பு அடைவதற்காகச் சிதறிப்போய்விட்ட போதிலும், அவர் பின்னோக்கித் திரும்பவில்லை, ஆனால் அவர் நிறைவேற்றும்படி தம்மையே முழுமையாக ஒப்புவித்திருந்த திட்டத்தை நோக்கி அவர் தீவிரமாக முன்சென்றார். அவர் செய்த எல்லாவற்றிலும், அவருடைய பிதா அவருடன் இருந்தார். இருப்பினும் நமது பாவங்களுக்காக பலியாகும்படி இயேசு தம்மையே அளித்தவிஷயத்தில் அவருடன் பிதாவாகிய தேவன் இணையக் கூடாது இருந்தது; அதை இயேசு மாத்திரமே செய்ய முடிந்தது. இயேசு சிலுவையின்மீது நமக்காகப் பாவமானபோதும் பிதாவானவர் குமாரனைக் கைவிட்டிருந்தபோதும்கூட (2 கொரிந்தியர் 5:21), இயேசு தமது பிதாவுடன் ஒரு ஐக்கியத்தைப் பராமரித்தார். பிதாவானவரே இந்த உலகத்திற்கு அவரை (இயேசுவை) அனுப்பி இருந்தார். பிதாவின் திட்டத்தை ஏற்றுக்கொண்ட இயேசு, தம்முடன் எவர் ஒருவரும் நின்றாலும் இல்லை என்றாலும், தாம் அதைச் செயல்படுத்தத் தீர்மானித்தார்.

நமக்காகச் சிலுவைக்குச் செல்வதில் இருந்து இயேசுவை ஏதொன்றும் தடைசெய்யவில்லை; அவர் எருசலேமுக்குச் செல்லவும் சிலுவையை எதிர்கொள்ளவும் தமது முகத்தைத் திருப்பினார். இப்போது அவர் தமது முகத்தை, கைதுசெய்தல், விசாரணைகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆகியவற்றினூடே தனியே செல்வதற்குத் திருப்பியாக வேண்டியிருந்தது. இருந்தபோதிலும் அவர், தம்மீது விசுவாசம் கொள்ளும் யாவருக்கும் இரட்சிப்பை அருளும்படிக்கு, அதைச் செய்வதற்குத் தீர்மானித்தார்.

## முடிவுரை

நாம் எவ்வகையான இரட்சகரைக் கொண்டுள்ளோம்? நமக்காகக் காத்துள்ள எதிர்காலத்திற்கு நாம் ஆயத்தமாக இருக்கும்படி, நமக்குத் தெளிவாகப் போதிக்கும் ஒரு மீட்பரை நாம் கொண்டுள்ளோம். என்றும் நமக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் மீட்பரை நாம் கொண்டுள்ளோம். நமக்கு இரட்சிப்பை அருளுவதற்காக, அபாயம் மற்றும் வேதனையினூடே நீடிய பொறுமை கொண்டுள்ள மீட்பரை நாம் கொண்டுள்ளோம். நாம் அவரைப் புறக்கணித்தாலும் அவர் நம்மைக் கைவிடுவதில்லை. நாம் புரிந்துகொள்வதில் தாமதமாக இருக்கும்போது அவர் நம்மை விட்டுக் கடந்து போய்விடுவதில்லை. எவரொருவரும் அவருடன் நில்லாதிருந்தபோது, இரட்சிப்பின் இந்த மாபெரும் திட்டத்தை நிலைநாட்ட அவர் தம்மையே கையளித்தார். அவர் நமக்குப் போதிப்பார், நம்மிடத்தில் பொறுமையாக இருப்பார் மற்றும் நம்மை அவர் தவறாது நித்திய ஜீவனுக்குள் வழிநடத்துவார். தொகுத்துக் கூறுவதென்றால், நம்மிடத்தில் தெளிவாகப் பேசுகிற, நம்முடன் நீடியபொறுமையாக உள்ள மற்றும் ஒரு நித்திய வெற்றியினூடே நம்மைக் கண்ணோக்க இருக்கும் ஒரு

இரட்சகரை நாம் கொண்டுள்ளோம்.

*“இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்” (யோவான் 16:32).*

*“அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்” (மாற்கு 14:50).*

*“ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்” (மத்தேயு 27:46).*